[2014 ஆகஸ்ட் 12

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி பற்றிய கேள்விக்கு நல்ல பதிலை அளித்திருக்கிறார்கள். சர்வே எண் 572-ல் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், எனக்குப் பேச வாய்ப்பளித்த எங்கள் கட்சியின் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 409, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

409—

சொந்தக் கட்டடம்

***34866—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, வீரை ஊராட்சி, வேலாயுதபட்டிணம் மற்றும் பெரியவீரை கிராமங்களிலுள்ள நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதியில் உள்ள எழுவன்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ், 447 குடும்ப அட்டைகளுடன், வேலாயுதபட்டிணம் முழுநேர நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு வீரை ஊராட்சி மன்றத்தால் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், பாராளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தேவையான நிதி பெறுவதற்காக மாவட்ட ஆட்சியருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. உரிய நிதி கிடைத்தவுடன் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பெரியவீரை கிராமத்திலுள்ள 65 குடும்ப அட்டைதாரர்களும், வேலாயுதபட்டிணத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். பெரியவீரை கிராமத்தில் நியாய விலைக் கடை இல்லாத நிலையில், அங்கு கட்டடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்திரங்கள் அனைத்தும் சிறத்தின் கூட்டல், சேமிப்பு என்றால் பணத்தின் கூட்டல், விந்தை காவியங்கள் பாட்டின் கூட்டல், வெற்றிகள் அனைத்தும் அம்மா புகழின் கூட்டல், (மேசையைத் தட்டும் ஒலி) சுயவர் தொகுப்பது வேமைக் கூட்டல், தீயவர் விதைப்பது தீமைக் கூட்டல், காலங்கள் முழுதும் கடவுளின் கூட்டல், கடமைகள் முழுதும் அம்மா அறிவுக்கூட்டல், தேர்தல் என்றால் எதிரிக்குத் தோல்விக் கூட்டல், மக்கள் தந்ததோ அம்மாவுக்கு வெற்றிக் கூட்டல், இம்மாமன்றத்தில் அம்மா காலடித் தடம் பதித்தது வெள்ளி விழாக் கூட்டல், தமிழன் தவமிருப்பதோ அம்மா ஆட்சியின் பொன் விழாக் கூட்டல். இன்று ஆடிச் செவ்வாய், ஆடிச் செவ்வாயில் ஆலயங்களில் தீபக் கூட்டல், அசைந்து வந்த காவேரியையும், அசையாமல் நின்ற முல்லைப் பெரியாறையும் தனித்து நின்று வெற்றி கண்டது அம்மாவின் ஆற்றல் கூட்டல், அரசியலில் எதிரிகள் நினைப்பதோ

எண்ணிக்கைக் கூட்டணி; ஆனால், அம்மா அவர்களோ, தனித்து நின்று வரலாறு படைக்கும் வெற்றிக் கூட்டணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், வேலாயுதபட்டிணம் கிராமத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், சொந்தக் கட்டடம் கட்டக் கேட்டிருந்தோம். நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கித்தரக் கேட்டிருக்கிறார்கள். அந்த ஒன்றியத்திலே 22 கடைகள் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஆண்டுக்கு ஐந்து கடைகள் வீதம் நாங்கள் கட்டி வருகிறோம். மேலும், கூடுதலான கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு 22 கடைகளில் 10 கடைகளை நேரடியாக எடுத்து, சொந்தக் கட்டடம் கட்டித்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த ஆண்டு 10 கடைகளுக்காவது சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கோருகிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், அவருடைய தொகுதியில் மட்டும் கடந்த மூன்றாண்டுகளில் இதுவரை, 11 கடைகள் கட்டப்பட்டுள்ளன. அவர் 3 கடைகளுக்குத்தான் நிதியைக் கொடுத்திருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த ஆண்டு 5 கடைகளுக்குப் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை வாங்கிக் கொடுக்கும்பட்சத்தில், அவருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

முற்பகல் 10-20

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மூன்று கடைகளுக்கு நிதி கொடுக்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் காரைக்குடி தொகுதிக்குட்பட்ட சாக்கோட்டை ஒன்றியத்திலே இரண்டு கடைகளுக்கும், கண்ணங்குடி ஒன்றியத்திலே ஒரு கடைக்கும், எஸ். புதூர் ஒன்றியத்திலே இரண்டு கடைகளுக்கும் என, மொத்தம் ஐந்து கடைகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி கொடுத்திருக்கிறேன். ஆகவே, 22 கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரக்கூடிய சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, இந்த ஆண்டு 10 கடைகளுக்காவது சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, அறிக்கை பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில், சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 7,991 நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மனது வைத்தால், அனைத்து நியாய விலைக் கடைகளையும் சொந்தக் கட்டடத்தில் இயங்கச் செய்ய முடியும், அதனைச் செய்து கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு ஒரு சட்டம் போடுங்கள், அதுமாதிரி செய்து கொடுக்கச் சொல்லுங்கள் என்று கேட்டு, எல்லோருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இந்தக் கேள்வியைக் கேட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியத்தில், சோகத்தூர் ஊராட்சியில், சத்தியா நகரில் நியாய விலைக் கடை கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இந்த ஆண்டு நிதி ஒதுக்கும்பட்சத்தில், நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 410, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

410—

காகித ஆலை

***36643—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் காகித ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*